www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண்: | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

நேரம் : 3.00 மணி] **வரலாறு** [மொத்த மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன் – எனக் கூறியவர்?
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) அரவிந்தகோஷ்

2. கல்கத்தாவில் அனுசீலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிஹாரிதாஸ் ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தாநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார்கோஷ் ஈ) குதிரம்போஷ் மற்றும் பிரஃபுல்லாசாக்கி

3. பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.
கூற்று : ஜின்னாவை இந்து – முஸ்லீம் ஒற்றுமையின் தூதர் என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.
காரணம் : லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச்சிற்பி ஜின்னா ஆவார்
அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம்
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

4. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | | | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|
| அ) நாமசூத்ரா இயக்கம் | – 1. வடமேற்கு இந்தியா | | அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) ஆதிதர்ம இயக்கம் | – 2. தென்னிந்தியா | | ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) சத்ய சோதக் இயக்கம் | – 3. கிழக்கிந்தியா | | இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) திராவிட இயக்கம் | – 4. மேற்கு இந்தியா | | ஈ) | 3 | 4 | 1 | 2 |

5. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் – அரக்கோணம் ஆ) பம்பாய் – பூனா
இ) பம்பாய் – தானே ஈ) கொல்கத்தா – ஹூக்ளி

6. எப்போதும் முஸ்லீம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?
அ) 25 டிசம்பர், 1942 ஆ) 16 ஆகஸ்ட், 1946 இ) 21, மார்ச் 1937 ஈ) 22 டிசம்பர், 1939

7. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | | | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|
| அ) அமெரிக்கக்குடியரசுத் தலைவர் | – 1. டோஜா | | அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) சீனக்குடியரசுத் தலைவர் | – 2. வின்ஸ்டன் சர்ச்சில் | | ஆ) | 1 | 3 | 2 | 4 |
| இ) பிரிட்டிஷ் பிரதமர் | – 3. ஷியாங்கே ஷேக் | | இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) ஜப்பான் பிரதமர் | – 4. எஃப்டி ரூஸ்வெல்ட் | | ஈ) | 4 | 2 | 3 | 1 |

8. 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரச பிரதிநிதி
அ) வேவல் பிரபு ஆ) வின்லித்கோ பிரபு இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) கிளமண்ட் அட்லி

9. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.
i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்
iii) மௌண்ட்பேட்டன் திட்டம்
அ) ii, i, iii ஆ) i, ii, iii இ) iii, ii, i ஈ) ii, iii, i

10. அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது.
அ) மார்ச் 22, 1949 ஆ) ஜனவரி 26, 1946 இ) டிசம்பர் 9, 1946 ஈ) டிசம்பர் 13, 1946

11. சரியான விடையைத் தேர்வு செய்க.
கூற்று : ஜமீன்தாரி முறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியை எட்டியது.
காரணம் : பல நிலச்சுவான்தாரர்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

12. மகாத்மாக காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?
அ) 2005 ஆ) 2006 இ) 2007 ஈ) 2008

13. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது?
அ) மார்க்கோபோலோ ஆ) ரோஜர்பேக்கன் இ) கொலம்பஸ் ஈ) பார்தோலோமியோடயஸ்

14. பாஸ்டில் சிறை தகர்ப்பு -------- இல் நடைபெற்றது?
அ) 1789 ஜூன் 5 ஆ) 1789 ஜூலை 14 இ) 1789 நவம்பர் 11 ஈ) 1789 மே 1

15. ---------- நகரம் காட்டன் பொலிஸ் எனும் புனைப் பெயரை பெற்றது?
அ) மான்செஸ்டர் ஆ) லாங்காசயர் இ) லிவர்பூல் ஈ) கிளாஸ்கோ

16. இரு உலகங்களின் நாயகன் என கொண்டாடப்பட்டவர் -------- ஆவார்.
அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க் இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயர் யாது?
அ) அவந்தி ஆ) பிராவ்தா இ) மார்க்சிஸ்ட் ஈ) மெய்ன் காம்ப்

18. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942 இல் பசிபிக் பகுதியில் தலைமை ஏற்று வழிநடத்தியவர் -------- ஆவார்.
அ) மெக் ஆர்தர் ஆ) ஐசன் ஹோவர் இ) ஜெனரல் டி கால் ஈ) ஜார்ஜ் மார்ஷல்

19. பனிப்போர் எனும் சொல்லை உருவாக்கியவர்?
அ) பெர்னாட் பரூச் ஆ) ஜார்ஜ் ஆர்வெல் இ) ஜார்ஜ் கென்னன் ஈ) சர்ச்சில்

20. சோவியத் யூனியன் ------------ இல் சிதறுண்டது.
அ) நவம்பர் 17, 1991 ஆ) டிசம்பர் 8, 1991 இ) மே 1, 1991 ஈ) அக்டோபர் 17, 1991

## பகுதி - II

II. எவையேனும் 7 வினாக்களுக்கும் குறுகிய விடையளிக்கவும். (கட்டாய வினா எண் 30) 7x2=14

21. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
22. அன்னிபெசன்ட் அம்மையார் வெளியிட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிக்கைகளின் பெயர்களை எழுதுக.
23. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது.
24. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.
25. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
26. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்தது என்ன?
27. ஜட்லாந்து போரின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்தியம்புக.
28. ரோம் – பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்கு பின்புலமாக அமையப்பெற்றது யாது?
29. சீட்டோ – குறிப்பு வரைக.
30. அரசமைப்பு ஷரத்து 370 இன் முக்கியத்துவம் என்ன?

## பகுதி - III

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. (கட்டாய வினா எண் 40) 7x3=21

31. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
32. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
33. 1909 ஆம் ஆண்டின் மிண்டோ – மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக.
34. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
35. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
36. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
37. செப்டம்பர் படுகொலைகள் எதனால் ஏற்பட்டது.
38. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
39. இந்தோனேஷியா விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.
40. சூயஸ்கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 7x5=35

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக – பொருளாதாரக் காரணிகளை ஆய்க.
(அல்லது)
ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

42. அ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக
(அல்லது)
ஆ) டாக்டர் அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

43. அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச்சென்றது?
(அல்லது)
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

44. அ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.
(அல்லது)
ஆ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.


45. அ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது.
(அல்லது)
ஆ) "மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும் அதை லெனின் தீபமாக ஏற்றினார்" – தெளிவுப்படுத்துக

46. அ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.
(அல்லது)
ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
அ) ஜாலியன் வாலாபாக் ஆ) தண்டி இ) கேதா ஈ) பாரக்பூர் உ) வேதாரண்யம்

47. அ) உலகளாவிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஐ. நா சபையின் பங்கு –விளக்குக.
(அல்லது)
ஆ) அமெரிக்க விடுதலைப் போரின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு காட்டி வரைக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி ii

**21. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.**

- ◈ இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர். ✓
- ◈ ஐரோப்பியர்களின் எதிர்ப்பால் இம்மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டது. ✓
- ◈ தேசிய அளவிலான ஒரு அரசியல்சார் அமைப்பு உருவாக காரணமாக அமைந்தது.

**22. அன்னிபெசண்ட் அம்மையார் வெளியிட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.**

- ◈ வாராந்திரி - காமன் வீல்
- ◈ தினசரி - நியூ இந்தியா
- ◈ புத்தகம் - **ர்ழற ஐனெயை ருசழரபாவ கழச குசநநனழஅ** ?

**23. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?**

- ◈ பிரிட்டி` காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் கொலை வழக்கே இரண்டாவது லாகூர் சதி வழக்கு.
- ◈ இந்த வழக்கில் ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ், பகத்சிங் உட்பட மேலும் 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

**24. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.**

- ◈ வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல். ✓
- ◈ அதிகமான இந்தியர்களைக் கொண்டு அரசபிரதிநிதியின் குழுவை விரிவாக்குதல். ✓

இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல

**25. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.**

- ◈ பூமிதான இயக்கத்தை வினோபா பாவே தொடங்கினார்.
- ◈ பெரும் நிலவுடைமையாளர்கள் தங்களிடம் உபரியாக உள்ள நிலங்களைத் தாமாகவே முன்வந்து வழங்க இணங்க வைத்தது.

**26. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்தது என்ன?**

- ◈ 100 கிளர்ச்சியாளர்கள் அமெரிக்க பூர்வகுடிகளைப் போல் வேடம் தரித்தனர். ✓
- ◈ பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலை வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறினர்.

கப்பல்களில் இருந்த 342 தேயிலைப் பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர். ✓

**27. ஜட்லாந்து போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.**

- ◈ முடிவுபடாத ஒரு போராகவும் மிகப்பெரும் கடற்போராகவும் அமைந்தது. ✓
- ◈ நீர்மூழ்கி கப்பல்களுக்கு தடை ஏற்படுத்துவதை ஜெர்மானி கண்டித்தது.

www.Padasalai.Net

◈ நேச நாடுகளின் கப்பல்களை தடையின்றி தாக்க அதிகாரம் வழங்கியது. ✓

---

**28. ரோம் - பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?**

◈ முசோலினியின் எத்தியோப்பிய படையெடுப்பை பிரிட்டனும் பிரான்சும் கண்டித்தன. ✓

◈ ஹிட்லர் இத்தாலியோடு நெருங்கிய நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினார். ✓

◈ ஹிட்லாரும் முசோலினியும் இணைந்து ரோம் - பெர்லின் அச்சு உருவாக்கினர்.

---

**29. நேட்டோவைப் போல ஏன் சீட்டோ (ளுநுயுவுழு) பிரபலமடையவில்லை?**

◈ சீட்டோ (ளுநுயுவுழு) ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது. ✓

◈ சீட்டோ (ளுநுயுவுழு) ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதியாக அமைந்தது.

◈ பிலிப்பைன்ஸ், தாய்லாந்து தவிர ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகள் பங்கேற்கவில்லை. ✓
உள்நாட்டில் ஏற்படும் ஆபத்துக்களை சம்பந்தப்பட்ட நாடுகளே எதிர்கொள்ள வேண்டும். ✓

---

**30. அரசமைப்பின் 'ரத்து 370 இன் முக்கியத்துவம் என்ன?**

◈ அரசமைப்பு நிர்ணய சபை 'ரத்து 370 - ஜம்மு கா'மீருக்கு தனி அந்தஸ்து வழங்கியது.

◈ கா'மீர் மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளும் கா'மீர் மக்கள் மீதான அக்கறையும் தனி அந்தஸ்து வழங்கக் காரணமாயின.

---

## பகுதி III

**31. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.**

◈ அரவிந்த கோ', அவரது சகோதரர், உட்பட மேலும் 35 நபர்கள் கைது செய்யப்பட்டனர். ✓

◈ சித்ரஞ்சன் தாஸ் இந்த வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளின் சார்பாக வாதாடினார். ✓

◈ சதியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இல்லாததால் அரவிந்த கோ' விடுவிக்கப்பட்டார்.

---

**32. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?**

◈ பூனா ஒப்பந்தத்தின்படி வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது. ✓

◈ தீண்டாமை கொடுமைக்கு உள்ளான மக்களின் தனித் தொகுதிகளை பறித்துக் கொண்டது.

◈ அம்மக்களுக்கான இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ✓

◈ இடஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது. ✓

---

**33. 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக.**

◈ முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி வழங்கி அரசமைப்பு சார்ந்த அடையாளத்தை வழங்கியது. ✓

◈ வகுப்பு வாதத்தை வளர்க்க தனித்தொகுதி என்னும் நுட்பத்தை நடைமுறைப்படுத்தியது.

◈ ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்தது. ✓

www.Padasalai.Net

இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை முழுமையாக அந்நியப்படுத்தியது. ✓

---

**34. டாடா இரும்பு மற்றும் எ‡கு நிறுவனம் (வுஐளுஊழு) பற்றி குறிப்பு எழுதுக.**

◈ 1907 இல் பீகாரிலுள்ள சாகி டாடா இரும்பு மற்றும் எ‡கு நிறுவனம் அமைக்கப்பட்டது. ✓

◈ **வுஐளுஊழு** நிறுவனம் முதன்முதலில் சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக அமைக்கப்பட்டது. ✓

◈ இந்த துறையில் மற்ற முயற்சியாளர்களைவிட டாடா உன்னத நிலையை அடைந்துள்ளது. ✓ அதன் உற்பத்தி 1917-18 இல் 1,81,000 டன்னாக அதிகரித்து காணப்பட்டது.

---

**35. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.**

**(i)** ஒரு நாடு மற்றொரு நாட்டின் நிலஎல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.

**(ii)** இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.

**(iii)** ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.

**(iv)** இரு நாடுகளுக்கு இடையே சமத்துவம், ஒன்றுக்கொன்று பயனடைய கூட்டுறவு.

**(v)** சமாதான சகவாழ்வு.

---

**36. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?**

◈ இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது. ✓

◈ பால் மற்றும் முட்டை உற்பத்தியானது தொடர்ந்து அதிகரித்தது. ✓

◈ வசதி வாய்ப்புள்ள - வசதி வாய்ப்பில்லா பகுதிகள் இடையே ஏற்ற தாழ்வு அதிகரித்தது.

◈ ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் சூழலியல் பிரச்சனைகளை ஏற்படுத்தின. ✓

---

**37. 'செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது?**

◈ அரசியல் கைதிகள், எதிர் புரட்சியாளர்களின் சதியில் இணையப் போவதாக மக்கள் நம்பினர். ✓

◈ இதன் விளைவாக மக்கள் கூட்டம் சிறைச்சாலைகளைத் தாக்கின. ✓

◈ அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டனர். ✓

◈ 1792 செப்டம்பர் 2 முதல் அடுத்த நான்கு நாட்களில் 1,200 கைதிகள் கொல்லப்பட்டனர்.

---

**38. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?**

◈ வீரர்கள் தமது உடலையும் உயிரையும் பாதுகாக்க அகழிகளை தோண்டினர். ✓

◈ குண்டுகள் வெளியிட்ட தீயில் இருந்து வீரர்களைப் பாதுகாக்க உதவியது.

◈ இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றுக்கொன்று இணையாக இருந்தன. ✓

◈ உணவு, வெடிபொருள்கள், புதிய துருப்புகள், கடிதங்கள் ஆகியன வந்தன. ✓

---

**39. இந்தோனேசிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.**

◈ இளம் பொறியாளரான சுகர்னோ இந்தோனேசிய தேசிய கட்சியை நிறுவினார். ✓

www.Padasalai.Net

◈ 1931 இல் சுகர்னோ கைது செய்யப்பட்டார். அவரது கட்சி கலைக்கப்பட்டது. ✓
◈ இந்தோனேசியா விடுதலை அடைய உலகப் போரில் ஜப்பானை ஆதரித்தார். டச்சுக்காரர்களை வெளியேற்றி இந்தோனேசியா சுதந்திரம் பெறச் செய்தார். ✓

---

**40. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.**

◈ 1956 இல் எகிப்தின் குடியரசுத் தலைவர் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். ✓
◈ இஸ்ரேலிய படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்து சென்றன.
◈ பிரிட்டிஷ் மற்றும் பிரான்சின் போர் விமானங்கள் எகிப்து விமானத் தளங்கள் மீது குண்டு வீசின.
◈ இப்போரை ஐ.நா. சபை கண்டித்தது. எனவே இஸ்ரேல், பிரிட்டன், பிரான்ஸ் போரை நிறுத்தின.

---

## பகுதி IV

**41(அ). பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க.**

**<u>தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகள் :</u>**

**1. புதிய நிலவுடைமை உரிமை :**

◈ நிலம் விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டது. வேளாண்மை வணிக மயமாக்கப்பட்டது.
◈ சந்தைக்குத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்தனர்.

**2. கட்டுப்பாடுகளற்ற வணிகக் கொள்கை :**

◈ ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
◈ இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இந்தியாவில் மலைபோல் குவிந்தன.

**3. அவுரி புரட்சி :**

◈ அவுரிக்கு பண்ணையாளர்கள் சந்தை விலையைவிட குறைவாக கொடுத்தனர்.
◈ புது ஒப்பந்தங்கள் போட மறுத்து விவசாயிகள் 1859 - 60 இல் புரட்சி செய்தனர்.

**4. இந்தியாவில் பஞ்சங்கள் :**

◈ கொடுமையான நிலவரியின் காரணமாக பஞ்சங்கள் மீண்டும் மீண்டும் ஏற்பட்டன.
◈ ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போதும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.

**5. ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் :**

◈ ஒப்பந்தத் தொழிலாளர் முறையில் ஐந்து வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர். தொழிலாளர்களை சூழ்ச்சியாலோ அல்லது கடத்தியோ கொண்டுவர அரசு அனுமதித்தது.

---

**41. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.**

**<u>லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் :</u>**

**(i)** நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மத்திய கட்டுப்பாட்டில் இருந்து மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்.

**(ii)** மத்திய மற்றும் மாகாண சட்ட மேலவைகளின் உறுப்பினர்களில் 4∴5 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், 1∴5 பங்கு நபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.



www.Padasalai.Net

**(iii)** மத்திய மற்றும் மாகாண சட்டப் பேரவைகளின் உறுப்பினர்களில் 4∴5 பங்கு பரந்துபட்ட வாக்குப்பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

**(iv)** மத்திய நிர்வாக சபை உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களில் 1∴2 பங்கு நபர்கள் அந்தந்த சபைகளின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்க வேண்டும்.

**(v)** மாகாண சபைத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகள் வழங்க காங்கிரஸ் ஒப்புக் கொண்டது. இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்க காங்கிரஸ் ஒப்புக் கொண்டது.

**(vi)** தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப மத்திய மற்றும் மாகாண அரசுகள் நடக்க கடமைப்பட்டுள்ளன. தடுப்பாணை அதிகாரம் பெறும் தீர்மானம் ஓராண்டுக்குள் மீண்டும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அது செயல்பாட்டுக்கு வரும்.

**(vii)** இந்திய அரசுக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் உள்ள உறவுகளும் இந்தியாவுக்கும் காலனி செயலருக்கும் உள்ள உறவுகளும் ஒத்திருக்க வேண்டும். ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்.

---

**42. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.**

**<u>தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் :</u>**

**1. வட்டார மொழி சொற்பொழிவுக் கலையின் வளர்ச்சி :**

- ◈ அரசுக்கு எதிரான கூட்டங்களில் வட்டார மொழியில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.
- ◈ மாணவர்கள் வந்தே மாதரம் என்ற முழக்கத்துடன் ஐரோப்பியர்களை வாழ்த்தினார்கள்.

**2. வ.உ.சி. யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் :**

- ◈ ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி நிறுவினார்.
- ◈ வ.உ.சி. **எஸ்.எஸ்.** கலியா, **எஸ்.எஸ்.** லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.

**3. கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் :**

- ◈ 1908 இல் வ.உ.சி., சுப்பிரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்.
- ◈ இருவரின் உரைகளால் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

**4. வ.உ.சி., சுப்ரமணிய சிவா - கைதும் சிறைவாசமும் :**

- ◈ 1907 இல் பிபின் சந்திர பால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினர்.
- ◈ வ.உ.சி., சுப்ரமணிய சிவா இருவரும் தேச துரோகக் குற்றத்தில் கைது செய்யப்பட்டனர்.

**5. சுப்ரமணிய பாரதி - கவிஞர் மற்றும் தேசியவாதி :**

- ◈ பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணி அமர்த்தப்பட்டார்.
- ◈ திலகரின் **வுநெஉள ழக நேற ியசவல** எனும் நூலை பாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார்.

**6. ஆஷ் படுகொலை :**

- ◈ திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழி வாங்குவதற்காக ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது.
- ◈ திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார்.

---

**42. டாக்டர். அம்பேத்காரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.**

**<u>டாக்டர். அம்பேத்காரின் கல்விப்பணியும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கமும் :</u>**

**1. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா :**

- ◈ அம்பேத்கர் பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை என்ற அமைப்பை நிறுவினார்.

- தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு என்று அழைக்கப்பட்டது.
- தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களை மீட்க அயராது பாடுபட்டார்.
- தனது கருத்துக்களை எழுத மூக் நாயக் என்ற பத்திரிக்கையை தொடங்கினார்.

**2. மஹத் சத்தியாகிரகம் :**

- ஊருணிகள் மற்றும் கிணறுகளில் நிலவிய தீண்டாமை கொடுமைக்கு எதிராகத் தொடங்கினார்.
- தீண்டாமை கொடுமைக்கு உள்ளான மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர முயன்றார்.
- ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்க மஹத் சத்தியாகிரகம் அமைப்பைத் தொடங்கினார்.
- அம்பேத்கரின் அறிவாற்றல் மற்றும் பொதுநடவடிக்கைகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.

**3. பூனா ஒப்பந்தம் :**

- 1932 இல் அம்பேத்கர் - காந்தியடிகள் இடையே பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது.
- பூனா ஒப்பந்தத்தின்படி வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது.
- ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்தரவாதம் அளிக்கப்பட்டது.
- இடஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது.

---

**43. பகத் சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?**

**<u>பகத் சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் :</u>**

**1. பகத்சிங்கின் பின்புலம் :**

- இளமைக் காலம் முதலே நவ்ஜவான் பாரத் சபா அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியே'ன் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

**2. பகத்சிங்கின் குண்டுவீச்சு :**

- 1929 ஏப்ரல் 8 இல் மத்திய சட்டமன்றத்திற்குள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தினார்.
- ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கையாக கருதப்பட்டது.

**3. இரண்டாவது லாகூர் சதிவழக்கு :**

- பிரிட்டி' காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் கொலை வழக்கே இரண்டாவது லாகூர் சதி வழக்கு.
- ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ், பகத்சிங் உட்பட மேலும் 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

**4. பகத்சிங்கின் மரணதண்டனை :**

- பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு 1930 இல் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங் தூக்கிலிடப்பட்டார்.

**5. பகத்சிங்கின் முழக்கங்கள் :**

- ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் புரட்சி ஓங்குக என்று முழங்கமிட்டார்.
- புரட்சி என்பது மனித குலத்தின் பிரிக்க முடியாத உரிமை என்று பகத் சிங் கூறினார்.

---

**43. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.**

**<u>வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கு :</u>**

**1. செய் அல்லது செத்துமடி எனும் முழக்கம் :**

- காந்தியடிகள் மக்களை நோக்கி 'செய் அல்லது செத்துமடி" என அழைப்பு விடுத்தார்.
- முடிவை நோக்கிய ஒரு சண்டையாக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் துவக்கினார்.

www.Padasalai.Net

**2. வெள்ளையனே வெளியேறு போராட்டங்கள் :**

◈ காந்தியடிகள் உட்பட அனைத்து தலைவர்களும் ஆகஸ்ட் 9 அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

◈ இந்தியா முழுவதும் கடையடைப்புகள், வன்முறை மோதல்கள், வேலை நிறுத்தங்கள் நடத்தப்பட்டன.

**3. அரசாங்கத்தின் அடக்குமுறைகள் :**

◈ காலனிய அரசு கடும் அடக்குமுறை உத்திகளையும், துப்பாக்கிச் சூட்டையும் கைக்கொண்டது.

◈ இராணுவ வீரர்கள் பயன்படுத்தியும், விமானப் படையைக் கொண்டும் மக்கள் கலைக்கப்பட்டனர்.

**4. கட்டவிழ்ந்த வன்முறைகள் :**

◈ தந்தி கம்பிகளையும் இருப்புப் பாதைகளையும் இரயில் நிலையங்களையும் மக்கள் நாசமாக்கினர்.

◈ அரசு அலுவலகங்களுக்கு நெருப்பு வைப்பதையும் ஒரு போராட்ட உத்தியாகக் கையாண்டனர்.

**5. இயக்கத்தின் பரவலும் அதன் தீவிரமும் :**

◈ 1943 இல் 91,836 பேர் கைது செய்யப்பட்டனர். 1060 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகினர்.

◈ 208 காவல் கண்காணிப்பு நிலையங்கள், 332 இருப்புப்பாதை நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டது.

**6. இரகசிய வானொலி ஒலிபரப்பு :**

◈ புரட்சியாளர்கள் பம்பாய் நகரில் இரகசியமாக வானொலி ஒலிபரப்பு முறைமையை நிறுவினர்.

**44. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.**

**<u>சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் :</u>**

**1. எழுத்தறிவு நிலை உயர்ந்தது :**

◈ கல்வி மற்றும் சுகாதாரம் சமூக வளர்ச்சியை மதிப்பிடுவதற்கான அளவுகோல்களாக உள்ளன.

◈ இந்தியாவில் எழுத்தறிவு நிலை 1951 இல் 18.3**மூ** லிருந்த 2011 இல் 74**மூ** ஆக உயர்ந்துள்ளது.

◈ ஆண்களில் 82 விழுக்காட்டினரும் பெண்களில் 65 விழுக்காட்டினரும் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.

**2. பள்ளிகள் அதிகரிப்பு :**

◈ தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்தது.

◈ 2014-15 இல் 12.72 லட்சம் தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டன.

◈ 2.45 லட்சம் இடைநிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டன.

**3. பல்கலைக் கழகங்கள் :**

◈ மேற்படிப்பு மையங்களின் எண்ணிக்கை பெருகியது. 38,498 கல்லூரிகள் செயல்பட்டன.

◈ 43 - மத்தியப் பல்கலைக்கழகங்கள், 316 - மாநிலப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டன.

◈ 22 - நிகர்நிலை பல்கலைக்கழகங்கள், 181 - தனியார் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டன.

**4. இடைநிற்கும் குழந்தைகள் :**

◈ இடைநிற்கும் குழந்தைகள் பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தோராக இருந்தனர்.

◈ குறிப்பாகப் பெண் குழந்தைகளே இடைநிற்றலில் அதிகமாக இருந்தனர்.

◈ சேர்க்கை மற்றும், இடைநிற்றல் விகிதத்தல் மிகப்பெரும் பிராந்திய வேறுபாடுகள் காணப்பட்டன.

**5. இடைநிற்றலை தடுக்கும் திட்டங்கள் :**

◈ அனைவருக்கும் கல்வித் திட்டம் (ளுளுயு)

◈ அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (சுஆளுயு)

◈ ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (சமக்ர சிக்'ா அபியான்)

**44. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.**



www.Padasalai.Net

**இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பு :**

**ஐ. இலக்கியத்தில் மறுமலர்ச்சி :**

1. **தாந்தே :**

◈ இடைக்கால கலாச்சாரத்தின் சுருக்கமாக தெய்வீக இன்பியல் நூலை படைத்தார்.

◈ காரணங்கள் மற்றும் இறையருள் மூலமாக மனிதகுலம் இரட்சிப்பு பெறமுடியும் என்றார்.

2. **பெட்ராா்க் :**

◈ லத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகள் இரண்டிலும் படைப்புகளை உருவாக்கினார்.

◈ கிரேக்க மற்றும் ரோமானிய கையெழுத்துப் பிரதிகளைத் தேடி கண்டுபிடித்தார்.

3. **பொக்காசியோ :**

◈ 100 கதைகளின் தொகுப்பை டெக்கமரான் என்ற புத்தகமாக வெளியிட்டார்.

◈ பிளேக் நோயிலிருந்து தப்பிக்கும் பொருட்டு ஒரு குடியிருப்பில் பேசியதை எழுதினார்.

4. **மாக்கியவல்லி :**

◈ "தி பிரின்ஸ்" என்ற படைப்பு ஆட்சியாளர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக அமைந்தது.

◈ நாட்டின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது ஒரு ஆட்சியாளரின் கடமை என்றார்.

**ஐஐ. கலையில் மறுமலர்ச்சி :**

5. **லியானர்டோ டாவின்சி :**

◈ அவர் ஒரு சிற்பி, சிந்தனையாளர் மற்றும் விஞ்ஞானி. மறுமலர்ச்சி கால மனிதர்.

◈ இறுதி விருந்து, மோனலிசா ஆகியன டாவின்சியின் மிகச் சிறப்பான படைப்புகள்.

6. **மைக்கேல் ஆஞ்சிலோ :**

◈ சிஸ்டைன் தேவாலய சுவர்களில் மறுமலர்ச்சி கால ஓவியங்களை வரைந்துள்ளார்.

◈ டேவிட் சிலையும் பியட்டா என்ற கன்னி மரியாளின் சிலையும் வடித்துள்ளார்.

7. **ரபேல் :**

◈ மடோனாவும் குழந்தையும் என்ற ஓவியத்தில் கன்னி மரியா, குழந்தை இயேசுவை வரைந்தார்.

◈ போப் இரண்டாவது ஜுலியஸின் நூலகச் சுவர்களில் பல ஓவியங்களை வரைந்தார்.

**45. ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது?**

**ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க் :**

1. **பிர'யாவின் பிரதமராக பிஸ்மார்க் :**

◈ ஜெர்மனி ஒருங்கிணைவுக்கு இரத்தமும், இரும்பும் என்ற வலுவான கொள்கையை கையாண்டார்.

◈ ஜெர்மானிய ஒருங்கிணைவு ஆஸ்திரியா, பிரான்சுடன் மோதாமல் சாத்தியமில்லை என்றார்.

◈ ஆஸ்திரியாவுடன் போர் ஏற்பட்டால் ர'யா போரில் தலையிடாது என்பதை உறுதி செய்தார்.

2. **ெ'ல்ஸ்விக் - ஹால்ஸ்டின் சிக்கல் :**

◈ ெ'ல்ஸ்விக், ஹோல்ஸ்டின் டென்மார்க்கின் கீழ் இருந்த இரு ஜெர்மானிய மாநிலங்கள்.

◈ 1864 இல் ஆஸ்திரியா, பிர'யாவின் கூட்டுப் படைகள் டென்மார்க்கை வீழ்த்தின.

◈ 1865 - காஸ்டெய்ன் மாநாடுபடி, ெ'ல்ஸ்விக் பிர'யாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

3. **ஆஸ்திரிய - பிர'யப் போர் :**

◈ ஆஸ்திரியாவை வெனிரீயாவில் இருந்த விரட்ட பியட்மாண்ட்-சார்டினியா உதவியது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ஆஸ்திரியாவை சடோவா போரில் தோற்கடித்து பிரேக் உடன்படிக்கை செய்து கொண்டது.
- பிர'யாவின் தலைமையில் வடக்கு ஜெர்மானிய கூட்டமைப்பில் 22 மாநிலங்கள் இணைந்தன.

**4. எம்ஸ் தந்தி :**

- ஸ்பானிய அரியணை குறித்து பிர'ய மன்னர் பிஸ்மார்கிற்கு எம்ஸ் தந்தி மூலம் செய்தி அனுப்பினார்.
- பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் அமைச்சரை சிறுமைப்படுத்தியதாக கருதும்படி பிஸ்மார்க் மாற்றினார்.
- பிர'யர்கள் தங்கள் மன்னர் மதிக்கப்படவில்லை என்று நினைக்கும்படி பிஸ்மார்க் மாற்றினார்.

**5. பிராங்கோ - பிர'யப் போர் :**

- செடானில் நடந்த போரில் பிரான்ஸ் தோல்வியுற்றது. பிஸ்மார்க் பாரிசைக் கைப்பற்றினார்.
- 3 ஆம் நெப்போலியன் சரணடைந்தார். 1871 இல் பிராங்க்பர்ட் உடன்படிக்கை ஏற்பட்டது.
- பிர'ய மன்னர் முதலாம் வில்லியம் வட-தென் ஜெர்மனியின் மன்னராக அறிவிக்கப்பட்டார்.

**45. 'மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார்" தெளிவுபடுத்து.**

**மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார் :**

**ஐ. மார்க்சியமும் அதன் தாக்கமும் :**

- சோ'லிசப் புரட்சிக்கு, உழைக்கும் மக்களும், நடுத்தர மக்களின் இருப்பும் கட்டாய முன் தேவை என மார்க்சும், ஏங்கல்சும் கருதினர்.
- பின்தங்கிய ர'யாவில் சோ'லிசப் புரட்சி ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர்கள் கருதவில்லை.
- அரசின்மை வாதம், தீவிரவாதப் போக்கு போன்ற சோ'லிச சிந்தனைகள் குறைந்தது.
- ஒடுக்கப்பட்ட வாழ்க்கைச் சூழல் அமைந்த இடத்தில் மார்க்சியமே செழித்து வளர்ந்தது.
- மார்க்சிய கூட்டம் வலுப்பெற்று முன்னேற லெனின் அதன் கவர்ந்திழுக்கும் தலைவரானார்.

**ஐஐ. ர'ய புரட்சியில் லெனின் பங்கு :**

- மார்க்சின் சிந்தனைகளால் உந்தப்பட்ட லெனின் வெகுஜன நடவடிக்கையின் மூலமாகவே விடுதலை அடைய முடியும் என்று நம்பினார்.
- புரட்சி வெடித்த போது சுவிட்சர்லாந்தில் இருந்த லெனின் புரட்சி தொடர விரும்பினார்.
- 'அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே" என்பது லெனினின் தாரகமந்திரம்.
- போர்களால் பாதிக்கப்பட்ட மக்களை 'ரொட்டி, அமைதி, நிலம்" என்ற முழக்கம் ஈர்த்தது.
- போல்'விக் மத்திய குழுவிடம் உடனடியாக ஒரு புரட்சியை நடத்துமாறு அறிவுறுத்தினார்.
- அரண்மனை, தலைமைச் செயலகம், அரசுக் கட்டடங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன.
- லெனின் தலைமையில் புது பொதுவுடைமை அரசு 1917 நவம்பர் 8 அன்று பதவியேற்றது.

**46 'இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது" என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.**

**<u>இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது :</u>**

- முதல் உலகப்போர் முடிவில் ஜெர்மனி மீது கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.
- ஜெர்மனியிடம் இருந்த காலனிய நாடுகள் பறிக்கப்பட்டது. படையளவு சுருக்கப்பட்டது.
- அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சுக்கு விட்டுக் கொடுக்க கட்டாயப்படுத்தியது.
- சார் பள்ளத்தாக்கில் பிரான்சு தற்காலிக படைகளை நிறுத்திக் கொள்ள நிர்ப்பந்தித்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியா போலந்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- 6,600 மில்லியன் பவுண்டுகள் போர் இழப்பீட்டுத் தொகை ஜெர்மனியிடம் கோரப்பட்டது.
- தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்குள் எண்ண அலை ஏற்பட்டது.
- பின் தொடர்ச்சியாக ஜெர்மனியில் நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழி வகுத்தது.
- சிறு குடியரசாக மாற்றப்பட்ட ஆஸ்திரியாவை, ஜெர்மனியிடம் இருந்து பிரித்து வைத்தது.
- டால்மேஷியாவை யுகோஸ்லோவியாவிடம் கொடுத்ததால் இத்தாலி பாதிப்பு அடைந்தது.

www.Padasalai.Net